OS.No. 178/2022

Date : 03.09.2024

Witness Name & Rank – சரவணன் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. பிரதிவாதி எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்தும் பிற சொத்துக்களும் ஆதியில் எனது தாயார் சரோஜாவிற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணத்தில் மேற்கு பகுதியை பொறுத்து எனக்கு எனது தாயார் ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். எனது தாயார் அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு எழுதினார் என்பது ஞாபகம் இல்லை. மீதமுள்ள கிழக்கு பகுதியை பொறுத்து எனது தாயார் கடந்த 24.3.2021ம் தேதி எனது சகோதரரான பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த உயிலில் 524 சதுரடி அமைந்துள்ள வீட்டினை எனது சகோதரருக்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். எனக்கு எழுதி வைத்த இடம் மற்றும் எனது சகோதரருக்கு எழுதி வைத்த இடம் பொதுவாக 994 சதுரடியை இருவரும் பயன்படுத்திக்கொள்வதாக பொதுவாக விட்டு மேற்படி உயில் சாசனத்தில் எழுதப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதன்படி எனது சகோதரருக்கு 497 சதுரடி பாத்தியம் உடையது என்றால் சரிதான். 994 சதுரடி முழுவதுமே 2 1/2 அடி சந்து 55 அடி குளியல் அறை போன்ற பிரிக்க முடியாத அளவுகளை உடைய சிறிய சிறிய பகுதிகளை உடையது என்றால் சரியல்ல. அதில் 3 கழிவறை, 3 குளியல் அறை உள்ளது. அதனை நாங்கள் பொதுவில் தான் அனுபவித்து வருகிறோம். என் சகோதரருக்கு உயில் மூலம் பாத்தியப்பட்ட சொத்தினை அவர் உயில் நடைமுறைக்கு வந்து சுவாதீனம் எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். வாடகைக்கு இருப்பவர்கள் சில குளியல் அறைகளையும் நாங்கள் சில குளியல் அறைகளையும் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். பொதுவிடம் என்பது 180 சதுரடி இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தை தான் பிரிக்க கேட்டு தான் நான் வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பொதுவிடத்தை நாங்களும் எங்கள் அண்ணன் சார்பாக குடியிருப்பவர்களும் பயன்படுத்தி வருகிறோம் என்றால் சரிதான். எங்கள் அண்ணன் சார்பாக வாடகைக்கு குடியிருப்பவர்களை நாங்கள் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. அதனால் தான் எனது சகோதரர் என் மீது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 14/2022 வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நாங்கள் இடையூறு செய்வதாக நிறைய முறை பல்லடம் காவல் நிலையத்தில் அங்கு குடியிருப்பவர்கள் புகார் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நாங்களும் புகார் கொடுத்துள்ளோம். எனது சகோதரரிடம் அடி மாட்டு விலைக்கு தாவா சொத்தை விலைக்கு கேட்டு அவர் கொடுக்காததால் அங்கு குடியிருப்பவர்களுக்கு இடையூறு செய்து பிரிக்க முடியாத இந்த சொத்தை குறித்து இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து முன் புறமும், எனது அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து பின்புறமும் உள்ளது என்றால் சரிதான். நான் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் மட்டன் ஸ்டால் வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு உடன் பிறந்த சகோதரி லோகாம்பாள் என்பவர் உள்ளார் என்றால் சரிதான். லோகாம்பாளுக்கு சொத்து கொடுக்க வில்லை என்பதால் அவர் தூண்டுதலின் பேரில் பிரதிவாதிக்கு மனஉளைச்சலை கொடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயார் இறந்த பிறகு பொது இடங்களை பரஸ்பரமாக பிரித்து அனுபவித்து வருகிறோம் ஆகவே இந்த தாவாவை நான் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எனது சகோதரர் அவருடைய சொத்தையும், தாவா சொத்தில் அவருக்குள்ள பாகத்தையும் விற்பனை செய்துவிட்டார் என்றால் எனக்கு தெரியவில்லை. கிரையம் வாங்கியவர்கள் சுவாதீனம் எடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அவர்களை இந்த வழக்கில் சேர்க்காமல் தொடர்ந்து இந்த வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. கிரையம் வாங்கியவர்களை இந்த வழக்கில் சேர்க்காமல் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.S.S.Siva/03.09.2024

சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம்.